Judicial Form No. 53

[See Rule 42]

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Calendar | **Case No. CC.No.161/2019** |
| Misscellancous | |
| Preliminary Register | |
| Sessions | |

| | |
|---|---|
| Deposition of **PW6** | Prosecution |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : திரு. ஹரித் |
| Father's Name/Husband Name | : த/பெ. கோவிந்தன் |
| Village | : பறையப்பட்டி புதூர் |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : **PW6** |
| Religion | : இந்து |
| Age | :31 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **22nd** Day of **December 2021.**

திரு. ஹரித்

**முதல் விசாரணை**

நான் தற்போது பறையப்பட்டி புதூரில் குடியிருந்து டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.04.2019 ம் தேதி எனது ஆட்டோவில் சரக்கு இறக்கி விட்டு மாலை 3 மணிக்கு திரும்ப வந்து கொண்டிருக்கும்போது பறையப்பட்டி புதூர் கூட்டுறவு சொசைட்டி முன்பு கூட்டமாக இருந்தது. அருகில் சென்று பார்த்தபோது 2 நபர்கள் அடிப்பட்டு கீழே விழுந்திருந்தார்கள். இருசக்கர வாகனம் 2 கீழே கிடந்தது. அடிப்பட்ட நபரில் வேடியப்பன் என்பவர் எனது பக்கத்து ஊரை சேர்ந்தவர் ஆவார். அவருக்கு நெற்றியில் காயம் ஆகி இரத்தம் வந்து கொண்டிருந்தது. காயம்பட்ட வேடியப்பனை ஆம்புலன்ஸில் ஏற்றி அரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். அதன் பிறகு சேலம் நியூரோ பவுண்டேசன் மருத்துவமனையில் 10 நாள்கள் கழித்து இறந்து விட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்ததை நான் நேரில் பார்க்கவில்லை. வேடியப்பன் இறந்து பிரேத பரிசோதனை செய்த அன்று காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். விபத்து நடந்து 10 நாள்கள் கழித்து என்னை விசாரித்தார்கள். இறந்து போன நீயுரோபவுண்டேசனில் போய் பார்த்து விட்டு வந்தேன். அந்த விவரத்தை போலீசாரிடம் சொல்ல வில்லை. வேடியப்பன் எனக்கு தெரிந்தவர் என்பதும், வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி**